**ஸ்ரீமதே ராமாநுஜாய நம:|**

# The Known and The Unknown

-----------------------------------------

## Episode-023 (1 of 4)

## ஸ்ரீபாஷ்யகாரரும் ஆழ்வார்களின் அருளிச் செயல்களும்

==========================================

நம் தர்சந ஸ்தாபகரான உடையவருக்கு, "**ஸ்ரீ ராமாநுஜ முநி**" என்ற ஸந்யஸ்த திருநாமமிருக்க நாம் அனைவரும் அவரை ஏன் "**ஸ்ரீபாஷ்யகாரர்**" என்று அழைக்கின்றோம்? இப்பெயரை ஸ்ரீராமாநுஜருக்கு யார் கொடுத்தது? இப்பெயர் வரக் காரணம் யாது? என்பதுபற்றி முதலில் இந்த இதழில் அறிந்து கொள்ள முயல்வோம். அதன் பிறகு ஸ்ரீபாஷ்யகாரர் ஆழ்வார்களின் அருளிச் செயல்களை எவ்விதம் அநுபவித்தாரென்பதை நாமும் க்ரமேண பின் வரும் இதழ்களில் நன்கு அநுபவிப்போம்.

வியாஸ பகவான் வேத வேதாந்தங்களில் உள்ள சிறந்த கருத்துக்களை எல்லாம் அனைவரும் எளிதில் அறிந்து கொள்ள திருவுள்ளம் பற்றி அவற்றை மிகவும் ரத்னசுருக்கமான ப்ரஹ்ம ஸூத்ரங்களாக அருளிச் செய்தார். இந்த ப்ரஹ்ம ஸூத்ரங்களுக்கு நம் பூர்வாசார்யர்கள் இசைந்த விசிஷ்டாத்வைத ஸித்தாந்தபரமாக ஒரு விசதமான பாஷ்யத்தை ஸ்ரீ ராமாநுஜர் இயற்றினார். வியாஸரின் ப்ரஹ்ம ஸூத்ரங்களுக்கு ஸ்ரீஆதிசங்கர் அத்வைதபரமாகவும், ஸ்ரீமத்வாசார்யர் த்வைதபரமாகவும் பாஷ்யமியற்றினர். இவை இன்றளவும் ஸ்ரீசங்கர பாஷ்யமென்றும், ஸ்ரீமத்வ பாஷ்யமென்றும் அவரவர் பெயர் கொண்டே வழங்கப்படுகின்றன.

ஆனால் நம் ஸ்ரீராமாநுஜர் இயற்றிய ப்ரஹ்ம ஸூத்ர பாஷ்யத்யை மட்டும் "**ஸ்ரீ பாஷ்யம்**" என்றே த்ரிமதஸ்த்தர்களும் (விசிஷ்டாத்வைதிகளான நாம் மட்டுமன்றி, அத்வைதிகளும், த்வைதிகளும் கூட) வழங்குவதை இப்பொழுதும் நான் காண்கின்றோம். ஸ்ரீராமாநுஜர் ப்ரஹ்ம ஸூத்ர பாஷ்யத்தை தாம் இயற்றினோமென்ற அஹங்காரம் சிறிதும் கொள்ளாததினால் அவர் இயற்றிய பாஷ்யமானது அவரின் பெயரினால் அழைக்கப்படவில்லையென்று சிலர் கூறுவது ஏற்புடையதேயாயினும், இதனால் நம் ராமாநுஜருக்கு ஏன் ஸ்ரீபாஷ்யகாரர் என்ற திருநாமம் அந்வர்த்தமாயிற்று என்பது விளக்கப்படவில்லையாதலால் இதை சற்று விரிவாக ஆராய்வோம்.

ஸ்ரீ ராமாநுஜர் ப்ரஹ்ம ஸூத்ரங்களுக்கு மிக விரிவான பாஷ்யத்தைத் தலைக்கட்டிய (எழுதி முடித்த) பின்னர் அதை கிடாம்பி ஆச்சான் கரங்களில் சமர்ப்பித்து, காஷ்மீரிலுள்ள சாரதா (ஸரஸ்வதி) பீடத்தில் வைத்துக் கொணரும்படி யதிராஜர் ஆஜ்ஞாபிக்க, கிடாம்பி ஆச்சானும் அவ்வோலைச் சுவடிகளை தன் சிரஸின் மேல் எழுந்தருளப் பண்ணிக்கொண்டு காஷ்மீரத்திற்குக் சென்று சாரதா (ஸரஸ்வதி தேவியின்) பீடத்தில் ஸமர்ப்பித்தார்.

ஸரஸ்வதி தேவியும் அதைக் குளிர கடாக்ஷித்து மிகவும் களிப்புற்று, **"இது தான் ப்ரஹ்ம ஸூத்ரங்களுக்கு மிக மிகப் பொருத்தமானதும், உண்மையானதுமான வ்யாக்யானம்"** என்று போர உகந்து தன் ஶிரஸின் மேல் அவ்வோலைச் சுவடிகளை வைத்துக் கொண்டு ஆனந்தக் கூத்தாடிவிட்டு, பிறகு பிராட்டியுடன் கூடிய நாராயணனே ஏகதத்வமான பரப்ரஹ்மமென்றும், அப்படிப்பட்ட அந்த ப்ரஹ்மத்தின் திருவடிகளில் கைங்கர்யமாகிய ஸ்ரீயைப் பெறுவதே சேதநர்களுக்கு கிடைத்தற்கறிய மிகப் பெரிய செல்வம் (ஸ்ரீ) என்பதே நம் ராமாநுஜர் இயற்றிய பாஷ்யத்தின் அர்த்தமானதாலும், அதுவே உண்மையென்பதாலும், தானே அதற்கு **"ஸ்ரீ பாஷ்யம்"** என்று பெயரிட்டும், அதை இயற்றியவரான நம் ராமாநுஜமுநிக்கு **"ஸ்ரீ பாஷ்யகாரர்"** என்ற திருநாமத்தையும் சூட்டியருளினாள்.

பின்னர் ஸ்ரீ கிடாம்பி ஆச்சான், ஸ்ரீ பாஷ்யத்தை ஸரஸ்வதி பீடத்திலிருந்து தனது சிரஸில் வைத்துக் கொண்டு திரும்ப ஸ்ரீரங்கம் எழுந்தருளும் பொழுது, வழியில் தும்பையூர் கொண்டி என்ற இடைக்குல மூதாட்டியின் இல்லத்தில் தங்கி தன் நித்யாநுஷ்டாநங்களையும், திருவாராதநத்தையும் அநுஷ்டித்தார். தும்பையூர் கொண்டியும் மிகவும் பயபக்தியுடனும், மரியாதையுடனும் ஸ்ரீ கிடாம்பி ஆச்சானின் ஸ்ரீபாத தீர்த்தத்தையும், அவர் உண்டு மிகுந்த ஶேஷ ப்ரஸாதத்தையும் ஸ்வீகரித்துக் கொண்டாள். அவ்விடைச்சியும் தான் கொடுத்த தயிருக்குப் பதிலாக ஸ்ரீ கிடாம்பி ஆச்சான் திருவடிகளில் பரமபதத்தை வேண்டி நிற்க, அது தன்னாலியலாத செயலென்றும், திருவேங்கடமுடையான் ஒருவனே ப்ரஸாதிக்க வேணுமென்று அருளிச்செய்ய, அப்படியானால் ஸ்ரீ கிடாம்பியாச்சானை திருவேங்கடமுடையானுக்கு ஓர் அநுமதி சீட்டு கொடுக்கவேணுமென்று நிர்பந்திக்க, ஸ்ரீ கிடாம்பி ஆச்சானும் அநுமதி சீட்டையெழுதி அவள் கையில் கொடுத்துவிட்டு, ஸ்ரீரங்கத்திற்குப் புறப்படலானார்.

அம்மூதாட்டியும் தட்டுத்தடுமாறி தள்ளாடியபடியே திருவேங்கடவனிடத்தில் அச்சீட்டை ஸமர்ப்பிப்பதற்காக திருமலை யாத்திரை மேற்கொண்டு நடக்க முடியாமல் மிகவும் கஷ்டப்பட, திருவேங்கடமுடையானும் மிக்க கருணையுடன் அவள் எதிரில் வந்து தானே அந்த சீட்டை வாங்கிப் படித்துவிட்டு, அங்கேயே, அப்பொழுதே மூதாட்டிக்கு பரமபதம் நல்கியதாக குருபரம்பரை கூறுகின்றது.

பிறகு, ஸ்ரீ கிடாம்பி ஆச்சானும் திருவரங்கத்திற்குத் திரும்பி வந்து உடையவரின் திருக்கரங்களில் அந்த ஸரஸ்வதி தேவி மிக உவந்து கடாக்ஷித்த ஸ்ரீபாஷ்யத்தையும், ஸ்ரீபாஷ்யகாரரென்னும் திருநாமம் சாற்றிய விருதையும் ஸமர்ப்பித்தார். கூரத்தாழ்வான், முதலியாண்டான், திருக்குருகைப்பிரான் பிள்ளான் முதலிய உடையவரின் ஸ்ரீபாதத்தை ஆஶ்ரயித்த முதலிகள் அனைவரும், "இது நம் ஆசார்ய ஸார்வபௌமருக்கு மிகவும் ஒக்கும்" என்று கூறி அருளிப்பாடிட, அன்று முதல் நம் தர்ஶந ஸ்தாபகரான ஸ்ரீ ராமாநுஜ முநிக்கு **"ஸ்ரீ பாஷ்யகாரர்"** என்னும் பெயரும் அவர் அருளிச்செய்த அந்த ப்ரஹ்ம ஸூத்ர பாஷ்யத்திற்கு **"ஸ்ரீ பாஷ்யம்"** என்னும் பெயரும் அந்வர்த்தமாயிற்று.

[To be continued in Episode-023 (2 of 4)]

**ஸ்ரீமதே ராமாநுஜாய நம:|**

## The Known and The Unknown

-----------------------------------------

**Episode-023 (2 of 4)**

### ஸ்ரீபாஷ்யகாரரும் ஆழ்வார்களின் அருளிச் செயல்களும்

==============================================

**(தொடர்ச்சி)**

நம் தர்ஶந ஸ்தாபகரான ஸ்ரீ ராமாநுஜருக்கு, ஸ்ரீ பாஷ்யகாரென்னும் திருநாமம் எவ்விதம் வந்ததென்பதைப் பார்த்தோம். அவருக்கு உண்மையிலேயே ஆழ்வார்களின் அருளிச் செயல்களில் ஈடுபாடு உண்டா? அப்படி ஈடுபாடு இருந்திருப்பின் அவர் ஏன் தனது நவ க்ரந்தங்களில் ஒன்றில்கூட, ஆழ்வாரின் பாசுரங்களைக் குறிப்படவில்லையென்ற கேள்விகளுக்கு விடை காண்போம்.

சுமார் ஆயிரம் வருடங்களுக்கு முன் வேதங்களை ஒத்துக்கொண்டு வைதீக மதத்தை தழுவியவர்கள் ப்ரஸ்தாநத்ரயம் என்றழைக்கப்படும் வேதம், இதிகாஸம் மற்றும் புராண வசநங்களையே ஆதாரமாகக் கொண்டு தத்தம் ஸித்தாந்தங்களை ஸ்தாபித்தனர். ப்ரஸ்தாநத்யத்திற்கு வெளியிலிருந்து காட்டும் மேற்கோளை வைதீகர்கள் ஒத்துக்கொள்ளாத காலகட்டமாக அந்நாட்கள் இருந்ததினால், நம் தர்ஶந ஸ்தாபகரான ஸ்ரீ பாஷ்யகாரர் ஆழ்வார்களின் அருளிச் செயல்களை தனது நவ க்ரந்தங்களில் எங்குமே ப்ரமாணமாக எடுத்துக் காட்டவில்லையானாலும், ஆழ்வார்களின் அருளிச் செயல்களிலிருந்து நம் விஶிஷ்டாத்வைதபரமான கருத்துக்கள் அனைத்தையும் அவற்றை ப்ரமாணமாகக் காட்டாமல் தனது நவ க்ரந்தங்களிலும் அவற்றின் கருத்துக்களைச் சொல்லி இருக்கின்றாரென்பது உண்மையே.

ஸ்ரீ ஆண்டாள் அருளிச்செய்த திருப்பாவையை தனது நித்யாநுஷ்டமாகக் கொண்டிருந்ததாகவும், அதன் மிகச் சிறப்பான அர்த்தங்களையெல்லாம் தனது ஶிஷ்யர்களுக்கு உபதேஶம் செய்ததாகவும், அதனால் அவர் "திருப்பாவை ஜீயர்" என்றழைக்கப்பட்டதையும் குருபரம்பரை கூறுவதிலிருந்து நாம் ஸ்ரீ பாஷ்யகாரர் ஆழ்வார்களின் அருளிச் செயல்களில் கொண்டிருந்த ஈடுபாட்டை உள்ளங்கை நெல்லிக் கனி போன்று தெளிவாக அறிய முடிகின்றது. ஸ்ரீ பாஷ்யகாரரைப் போற்றுகின்றதான திருவரங்கத்தமுதனார் இயற்றிய ப்ரபந்ந காயத்ரீ என்று அழைக்கப்படுகின்ற **"இராமாநுச நூற்றந்தாதி"** என்ற ப்ரபந்தத்தை நாலாயிர திவ்ய ப்ரபந்தத்துடன் சேர்த்தே இன்றளவும் நாம் அநுஸந்தித்து வருகின்றோம்.

சிலர், இராமாநுச நூற்றந்தாதி ஆழ்வார்களினால் இயற்றப்படாததினாலும், ப்ரபந்த நாயகனாக பெருமாள் இல்லாததினாலும் அதை நாலாயிர திவ்ய ப்ரபந்தமாக ஒத்துக் கொள்வதில்லை. மேலும் ஆழ்வார்களையும் அவர்தம் அருளிச் செயல்களையும் பரக்கவியம்பும் ஸ்ரீ மாமுநிகளின் உபதேஶ ரத்தின மாலையில் இராமாநுச நூற்றந்தாதி பற்றிய குறிப்பேதுமில்லை. ஆனால் கூரத்தாழ்வான்

திருக்குமாரரும் எம்பாரின் சீடரும் தென்னாசார்ய மற்றும் ஸ்ரீ அஹோபிலமட ஸம்ப்ரதாயத்தைப் பின்பற்றுபவர்களின் பூர்வாசார்யருமான ஸ்ரீ பராஶர பட்டர் தனது நாலாயிர திவ்ய ப்ரபந்த தனியனில்,

**பூதம்–ஸரஸ்ச–மஹதாஹ்வய–பட்டநாத**
**ஸ்ரீபக்தி ஸார–குலஶேகர–யோகி வாஹாங்|**
**பக்தாங்க்ரிரேணு–பரகால–யதீந்த்ர மிஶ்ராங்**
**ஸ்ரீமத் பராங்குச முநிம் ப்ரணதோஸ்மி நித்யம்||**

என்று தெளிவாக குறிப்பிட்ட பிறகும் கூட ஸ்ரீ பாஷ்யகாரர் ஆழ்வாரல்லாததால் அவரை ஆழ்வார் கோஷ்டியில் சேர்க்கக் கூடாதென்றும், திருவரங்கத்தமுதனார் இயற்றிய இராமாநுச நூற்றந்தாதியை நாலாயிர திவ்ய ப்ரபந்தத்துடன் சேர்க்கலாகாதென்றும் வாதிடுவோர் பட்டரின் திருவடிகளில் அபசாரப்படுகின்றனர். ஸ்ரீவைணவர்கள் பக்கலில் குற்றம் காண்பது பாகவதாபசாரமாகுமென்பதைக் கருத்தில் கொண்டு, இதை இத்துடன் விட்டுவிடுவோம்.

இயற்பாவின் இறுதியில் அமைந்துள்ள இராமாநுச நூற்றந்தாதியை, எம்பெருமானார் எழுந்தருளியிருந்த காலத்திலேயே இயற்பாவின் இறுதியில் அநுஸந்திக்கும் வழக்கம் உண்டென்பதை கோயிலொழுகில்,

***"திருவரங்கத்தமுதனார், எம்பெருமானார் விஷயமாக காயத்ரீ (108) ஜப ஸங்க்யையாலே கலித்துறை நூற்றந்தாதியை விண்ணப்பம் செய்ய, பெருமாள், ஒரு ஸப்தாவரணத் திருநாளிலே, உடையவரைத் தம்முடனே கூடவர வேண்டாமென்று நியமித்தருளி, ஸ்ரீ வைஷ்ணவர்கள் அநுஸந்திக்கக் கேட்டருளி போர உகந்தருளினார். அதுமுதலாக, பெருமாள் நியமநத்தினாலே, பெரிய ஸந்நிதியிலே, இயற்பா அநுஸந்தித்த உடனே நூற்றந்தாதியை வரிசையுடன் கேட்டருளி ..... நூற்றந்தாதியை இயற்பாவுடன் சேர்த்து, ஸகல ஸ்ரீவைஷ்ணவர்களுக்கும் ப்ரபந்ந காயத்ரியாக நித்ய அநுஸந்தேயம் என்றும் ..... திட்டம் செய்தருளினார்."***

என்று அருளிச் செய்திருப்பதினாலே, நாலாயிர திவ்யப்ரபந்த அநுஸந்தானத்தில் இயற்பாவின் இறுதியிலேயே இராமாநுச நூற்றந்தாதியை அநுஸந்திக்கும் வழக்கம் இப்பொழுதல்ல, எம்பெருமானார் விபவத்தில் எழுந்தருளியிருந்த காலத்திலேயே திருவரங்கத்துறையும் எம்பெருமான் ஸ்ரீ ரங்கநாதனாலே தொடங்கி வைக்கப்பட்டதென்பது நமக்கு நன்கு விளங்குகின்றது.

எம்பெருமானாரின் வைபவங்களானது, எம்பெருமானின் வைபவங்களுக்குச் சிறிதும் குறைவற்றிருப்பதினால், அவைகளை நாம் அநுஸந்தித்து வருகின்ற போதிலும், அப்படிப்பட்ட எம்பெருமானார், ஆழ்வார்களின் அருளிச்செயல்களான திவ்யப்ரபந்தங்களிலே எவ்விதம் ஆழங்காற் படுகின்றாறென்பதை கீழ்க்கண்ட திருமழிசைப்பிரானின் திருச்சந்தவிருத்தம் 49வதில் முதலில் அநுபவிப்போம்.

**கொண்டை கொண்ட கோதை மீது தேன் உலாவு கூனி கூன்**
**உண்டை கொண்டு அரங்க ஓட்டி உள்மகிழ்ந்த நாதன் ஊர்**
**நண்டை உண்டு நாரை பேர வாளை பாய நீலமே**
**அண்டை கொண்டு கெண்டை மேயும் அம் தண் நீர் அரங்கமே.**

என்ற பாசுரத்தின் பொருளை அருளிச் செய்யுமாறு முதலியாண்டான் விண்ணப்பம் செய்ய, ஸ்ரீபாஷ்யகாரரும் ஆழ்வார் முதலிரண்டு வரிகளினாலே, தலைமுடியிலே வைத்திருக்கின்ற புஷ்பமாலைகளின் மீது வண்டுகள் ஸஞ்சரிக்கின்ற கூனியான மந்தரையினுடைய கூனாகிய வளைந்த முதுகில் வில்லிலே மண் உண்டையை வைத்து உள்ளே புகும்படி எய்து, அதனால் திருவுள்ளம் மகிழ்ந்த சக்ரவர்த்தித் திருமகனான ஸ்ரீ ராமபிரான் வர்த்திக்கின்ற தேசம் கோவிலென்றழைக்கப்படும் திருவரங்கம் என்றும், பின்னிரண்டு வரிகளினாலே நண்டைத் தின்ற நாரையானது உண்ட மயக்கத்தினால் பறக்க முடியாததினால் மெதுவாகத் தள்ளாடி நடக்க, இதனைக் கண்ட வாளை மீனானது அந்நாரை தன்னைப் பிடிக்க வருவதாகவெண்ணி பயந்து வேறோரிடத்திற்குத் துள்ளிப் பாய, இவ்விரண்டையும் பார்த்துக் கொண்டிருந்த ஒரு சிறு கெண்டை மீன் சடக்கென கருநெய்தல் மலரை அரணாகக் கொண்டு அதன் இருண்ட நிழலிலே தன் பயம் நீங்கப்பெற்று மேய்கின்ற அழகிய குளிர்ந்த நீர்வளத்தை உடைய தேசமானதும், கோவிலென்றழைக்கப்படும் திருவரங்கமேயென்றும் அருளிச் செய்தார்.

மேலும், இப்பாசுரத்தின் சிறப்பை ஸ்வாபதேசமாக, நண்டென்பது ஸம்ஸாரிகளென்றும், நாரையென்பது ஸம்ஸாரிகளின் அஹங்காரம் என்றும், ஸ்வதந்த்ரமான தன் முயற்சியிலே பிழைக்கலாமென்று முயல்பவர்கள் வாளை மீனைப் போன்றவர்களென்றும், அஹங்காரமும், ஸ்வதந்த்ரமான தன் முயற்சியும் அச்சத்திற்குக் காரணமென்றெண்ணி கருநெய்தல் மலரைப் போன்ற கருநீல வண்ணனான எம்பெருமானை ஶரணடைவது ஸம்ஸாரியான கெண்டை மீன் என்றும் ஸாதித்து, இதனால் ஆழ்வார், எம்பெருமானிடம் ஶரணாகதி செய்த ப்ரபன்னனின் அச்சமற்ற நிலையையும், மற்றையோர்களின் அவல நிலையையும் மிகத் தெளிவாகக் காட்டி, அப்படிப்பட்ட ப்ரபன்னர்கள் வாழும் தேசமானது ஸ்ரீ ராமபிரான் நித்ய வாசம் செய்யும் திருவரங்கமேயென்று அருளிச் செய்திருப்பது மிகவும் ரசிக்கத் தகுந்தது.

**"அம் தண் நீர் அரங்கமே"** என்பதினால் அழகியதானதும், ஆத்யாத்மிக, ஆதிபௌதிக, ஆதிதைவிகங்களாகிற தாபத்ரயங்களை அறவே நீக்கும் ஊரானது ஸ்ரீரங்கம் ஒன்றேயென்பதும், **"நீலமே அண்டை கொண்டு"** என்பதினால் ஶ்யாமமாய் ஸுகுமாரரான நம்பெருமாளுடைய ஸௌந்தர்யத்தை ஆஶ்ரயித்திருப்பார்க்கு போக்யமாகவிருப்பது ஸ்ரீரங்கத்தில் நித்யவாஸம் செய்யும் அந்த ஸ்ரீரங்கநாதனேயென்பதும் இப்பாசுரத்தின் உட்கருத்து.

[To be continued in Episode-023 (3 of 4)]

**ஸ்ரீமதே ராமாநுஜாய நம:|**

**The Known and The Unknown**

**----------------------------------------**

**Episode-023 (3 of 4)**

**ஸ்ரீபாஷ்யகாரரும் ஆழ்வார்களின் அருளிச் செயல்களும்**

**==========================================**

**(தொடர்ச்சி)**

மிக்க இறைநிலையான எம்பெருமானை, மெய்யாம் உயிர் நிலையான சேதநன் அடையவதற்குத் தக்க நெறி (உபாயம் அல்லது வழி அல்லது மார்க்கம்) சாத்திரங்களில் பலபடியாகக் கூறியிருப்பினும், அவற்றுள் முக்கியமாக இரண்டு மட்டுமே அநுஷ்டாநத்தில் உள்ளது. இவற்றை ஆழ்வார்கள் எவ்விதம் காட்டுகிறார்கள் என்பதை அருளிச் செய்ய வேண்டுமென ஸ்ரீ கிடாம்பி ஆச்சான் ஸ்ரீ பாஷ்யகாரரிடம் வினவினார்.

அதற்குப் பதில் பகரும் முகமாக நம் தர்ஶந ஸ்தாபகரான யதிராஜர், "ஒன்று பக்தி, மற்றொன்று ப்ரபத்தி. பக்தி நெறியாவது, முதிர்ந்த பக்தி கொண்டு எம்பெருமான் ஒருவனையே பற்றுவது. பக்தி நெறி தன் முயற்சியால் நடைபெறுவது. ப்ரபத்தி நெறி தன் முயற்சியினால் ஆவது ஒன்றும் இல்லை என்று நினைத்து, எம்பெருமானின் அருளை எதிர்பார்த்திருப்பது. அதிகாரிகள் தத்தம் அதிகார அநுகுணமாக இவ்விரண்டில் ஏதேனும் ஒன்றை அநுஷ்டிக்கலாம். பக்தி நெறியை முதல் மூன்று வருணங்களில் பிறந்த ஜ்ஞாந, வைராக்யம் கைகூடியவர்கள் தைலதாரையைப் போன்று இடைவிடாது அநுஷ்டிக்க வேண்டும். இம்முதலாவதான பக்தி நெறியை அகிஞ்சநர்களான நாம் அநுஷ்டிக்க இயலாதபோது, இரண்டாவதான ப்ரபத்தி ஒன்றே நமக்குத் தகுந்த நெறியாகிறது. பக்தி நெறி உண்டாக்கும் காலவிளம்பத்தை பொறுத்துக் கொள்ளாதவர்களும் மற்றும் கைம்முதலும், எம்பெருமானைத் தவிர வேறு எவரையும் கதியாகக் கொள்ளாதவர்களுமான அனைத்து வருணங்களிலுமுள்ள அனைவருமே ப்ரபத்தி நெறியை அநுஷ்டிக்கத் தகுந்தவர்கள் ஆவர்" என்று அருளிச் செய்து, பூதத்தாழ்வாரின் இரண்டாம் திருவந்தாதியின் இருபத்திரண்டாவது பாசுரத்தை இதற்கு மேற்கோளாகக் காட்டியருளினார்.

**அரியது எளிதாகும் ஆற்றலால் மாற்றிப்**
**பெருக முயல்வாரைப் பெற்றால்–கரியதோர்**
**வெண்கோட்டு மால்யானை வென்றி முடித்தன்றே**
**தண்கோட்டு மாமலரால் தாழ்ந்து**

| | | |
|---|---|---|
| அரியது | – | எம்பெருமானை வணங்கும் பக்தி நெறி அல்லது எம்பெருமானைப் பெறும் ப்ரபத்தி நெறி, |
| முயல்வார் | – | முயற்சி செய்கின்ற சேதநன் அல்லது எம்பெருமான், |
| கரிய | – | கருமையான நிறத்தையும் |
| ஓர் | – | ஒப்பற்ற |
| வெண்கோட்டு | – | வெண்மையான தந்தத்தையும் உடைய |
| மால்யானை | – | பெரிய கஜேந்திரன் என்னும் யானை |

| | | |
|---|---|---|
| தண்கோட்டு | – | குளிர்ந்த நீரை உடைய மடுவில் |
| மாமலரால் | – | பெரிய தாமரைப் பூவினால் |
| தாழ்ந்து | – | வணங்கி |
| வென்றி | – | வெற்றி |
| முடித்தன்றே | – | கொண்டதே (உடன்பாட்டு ஈற்றசை வினை) அல்லது கொண்டதோ? (எதிர்மறை வினா வினை) |

இப்பாசுரத்தின் முற்பகுதியில் பக்தி நெறிக்கு ஏற்புடையதான அர்த்தம்:

**"ஆற்றலால் மாற்றி பெருக முயல்வாரைப் பெற்றால் அரியது எளிதாகும்"**

ஒருவன், **ஆற்றலால்** அதாவது தனது முயற்சியினால், தனக்கு உண்டாகின்ற இடையூறுகளை **மாற்றி** அதாவது நீங்கும்படி செய்து, **பெருக முயல்வாரைப் பெற்றால்** அதாவது மிகவும் ஊக்கத்துடன் முயற்சி செய்யும் சேதநனுக்கு, **அரியது எளிதாகும்** அதாவது எம்பெருமானைத் தனது முயற்சியினால் வணங்கி அடைகின்ற அவனுக்கு பக்தி நெறியாகின்ற அரிய செயலும் மிக எளிதானதாக ஆகும்.

இப்பாசுரத்தின் முற்பகுதியில் ப்ரபத்தி நெறிக்கு ஏற்புடையதான அர்த்தம்:

**"ஆற்றலால் மாற்றி பெருக முயல்வாரைப் பெற்றால் அரியது எளிதாகும்"**

எம்பெருமான், **ஆற்றலால்** அதாவது தனது ஸர்வ ශக்தியினால், **மாற்றி** அதாவது தேநனின் முயற்சிகளனைத்தையும் நீங்கும்படி செய்வித்து, **பெருக முயல்வாரைப் பெற்றால்** அதாவது சேதநனுடைய நன்மைகளையே பார்ப்பதில் மிகவும் முயற்சி செய்கின்ற எம்பெருமானைப் பெற்றால், **அரியது எளிதாகும்** அதாவது எம்பெருமானின் கருணை ஒன்றினாலேயே அவனை அடையும் ப்ரபத்தி நெறியாகின்ற அரிய செயலும் மிக எளிதானதாக ஆகும்.

இப்பாசுரத்தின் பிற்பகுதியான உபமானத்தில், **கரியதோர் வெண்கோட்டு மால்யானை தண்கோட்டு** அதாவது கருமையான நிறத்தையும், ஒப்பற்ற வெண்மையான தந்தத்தையும் உடைய பெரிய கஜேந்திரன் என்னும் யானை குளிர்ந்த நீரை உடைய மடுவில் என்பதுவரை பக்தி, ப்ரபத்தி இரண்டிற்கும் பொதுவானது.

இப்பாசுரத்தின் பிற்பகுதியில் பக்தி நெறிக்கு ஏற்புடையதான அர்த்தம்:

**"மாமலரால் தாழ்ந்து வென்றி முடித்தன்று"**

கஜேந்திரன், **மாமலரால்** அதாவது பெரிய தாமரைப் பூவைக் கொண்டு எம்பெருமானின் திருவடிகளிலே, **தாழ்ந்து** அதாவது எம்பெருமானை வணங்கவேண்டும் என்ற தனது முயற்சியிலே, **வென்றி முடித்தன்றே** அதாவது வெற்றி பெற்றது.

இப்பாசுரத்தின் பிற்பகுதியில் ப்ரபத்தி நெறிக்கு ஏற்புடையதான அர்த்தம்:

**"மாமலரால் தாழ்ந்து வென்றி முடித்தன்று"**

கஜேந்திரன், **மாமலரால்** அதாவது பெரிய தாமரைப் பூவைக் கொண்டு எம்பெருமானின் திருவடிகளிலே, **தாழ்ந்து** அதாவது எம்பெருமானை வணங்கவேண்டும் என்ற தனது முயற்சியிலே, **வென்றி முடித்தன்றே** அதாவது வெற்றி பெற்றபெற்றதோ? இல்லையே.

இவ்விதம் பக்தி, ப்ரபத்தி ஆகிய இவ்விரண்டு நெறிகளையும் பகவானான ஸ்ரீ கண்ணபிரானின் பகவத் கீதை சரமஶ்லோகத்திற்கு ஏற்புடைய பொருளாக நம் ஸ்வாமி தேஶிகன், தனது சரமஶ்லோகச் சுருக்கின் முதற்பாசுரத்திலே,

**கல்லார் அகலும் கருமமும் ஞானமும் காதலும் மற்று**
**எல்லா நிலைகளுக்கு(ம்) ஏற்ப விதித்த கிரிசைகளும்**
**வல்லார் முயல்க வலியிழந்தார் என்னைத் தொழுக என்று**
**எல்லாத் தரும(மு)ம் உரைத்தவன் இன் அடி சேர்ந்தனமே**

என்று நம் ஸ்ரீ பாஷ்யகாரரின் திருவுள்ளப்படியே அருளிச் செய்திருப்பது மிகவும் ரசிக்கத் தக்கது.

ஸ்ரீ பாஷ்யகாரர் நம்மாழ்வாரின் திருவாய்மொழி பத்தாம் பத்தில் எட்டாம் திருவாய்மொழியின் முதற் பாசுரத்தை அநுஸந்தாநம் செய்து கொண்டிருந்த பொழுது அதில்,

**"திருமாலிருஞ்சோலை மலையென்றேனென்ன திருமால்**
**வந்து என் நெஞ்சு நிறையப் புகுந்தான்"**

என்று வருவதைக் கண்டு, அவன் எழுந்தருளியிருக்கும் இடத்தின் பெயரைச் சொன்னதற்கே அழகர் ஆழ்வாரின் நெஞ்சு நிறையப் புகுவாரெனில் அவனைக் கண்ணாரக் கண்டு ஸேவித்து மகிழ்ந்தோமென்றால் என்னதான் செய்யமாட்டான் என்று நினைத்து, உடன் கள்ளழகரென்றும், ஸுந்தரபாஹுவென்றும் போற்றப்படுகின்ற அழகரை மங்களாசாஸநம் செய்யத் திருவுள்ளம் பற்றினார்.

பிறகு, தம் சீடர்களுடன் புறப்பட்டுத் தென்திருமலையை அடைந்து எம்பெருமானின் திருமுன்பு நின்று, ஆழ்வார்கள் அருளிச் செய்த திருமாலிருஞ்சோலை திவ்ய ப்ரபந்த பாசுரங்களை நெஞ்சு உருக அநுஸந்தாநம் பண்ணிக்கொண்டு வந்தபோது, ஸ்ரீ ஆண்டாள் அருளிச் செய்த நாச்சியார் திருமொழியிலுள்ள,

**நாறு நறும்பொழில் மாலிருஞ்சோலை நம்பிக்கு, நான்**
**நூறு தடாவில் வெண்ணெய் வாய் நேரந்து பராவி வைத்தேன்,**
**நூறு தடா நிறைந்த அக்காரவடிசில் சொன்னேன்,**
**ஏறு திருவுடையான் இன்று வந்து இவை கொள்ளும் கொலோ.**

என்ற பாசுரத்தையும் அநுஸந்தித்தார். உடனே ஸ்ரீ ஆண்டாள் பெண்பிள்ளையாக இருந்ததினாலல்லவோ வாயினால் நேர்ந்து மட்டுமே நூறு தடா நிறைந்த வெண்ணெய் மற்றும் அக்காரவடிசிலை இவ்வழகருக்கு பராவி வைக்க முடிந்தது.

[To be concluded in Episode-023 (4 of 4)]

**ஸ்ரீமதே ராமாநுஜாய நம:|**

**The Known and The Unknown**

**----------------------------------------**

**Episode-023 (4 of 4)**

**ஸ்ரீபாஷ்யகாரரும் ஆழ்வார்களின் அருளிச் செயல்களும்**

**================================================**

**(தொடர்ச்சி)**

ஸ்ரீ ஆண்டாளின் திருவுள்ளக் கிடைக்கையான நூறு தடா நிறைந்த வெண்ணெயையும், அக்காரவடிசிலேயும் யாம் ஸமர்ப்பிப்போமென்று திருவுள்ளம் பற்றி ஸ்ரீ ஆண்டாள் வாய் நேர்ந்து பராவி வைத்ததை உண்மையிலேயே காரியகரமாக்கி, திருமாலிருஞ்சோலை நம்பிக்கு அமுது செய்வித்தார். பின்னர் திருமதுரையாகிய **"கூடலில் கோயில் கொண்ட"** அழகரையும், **"தாள தாமரைத் தடமணிவயல் திருமோகூர்"** காளமேகத்தையும், திருத்தண்காலில் தண்கால் அப்பனேயும் மங்களாஸாஸநம் செய்துகொண்டு, **"மென்னடைய அன்னம் பரந்து விளையாடும் வில்லிபுத்தூர் உறைவான்தன் பொன்னடி காண்பதோர் ஆசையினால்"** ஸ்ரீவில்லிபுத்தூருக்குள் புகுந்து திருமுக்குளத்தில் நீராடி தன் அநுஷ்டானங்களை முடித்துக்கொண்டு, வடபெருங்கோயிலுடையானை மங்களாஸாஸனம் செய்துவிட்டு, அன்னவயல் புதுவை ஆண்டாளையும், மன்னனாரையும், அவரை விரைந்து கொண்டுவந்த வினதைச் சிறுவனாம் கருடாழ்வாராகிய பெரிய திருவடியையும் சேர்த்தியிலே மங்களாஸாஸனம் செய்து களிப்பெய்தினார்.

சூடிக்கொடுத்த நாச்சியாரும் திருமாலிருஞ்சோலைமலை நம்பிக்குத் தான் வாய் நேர்ந்து பராவியதை உண்மையிலேயே கார்யகரமாக்கிய ஸ்ரீ பாஷ்யகாரரை, எவ்விதம் தங்கை ஆசைப்பட்டதை அவள் அண்ணன் நிறைவேற்றுவானோ, அதைப்போன்று, தான் வாய் நேர்ந்து பராவி வைத்ததை மெய்ப்படுத்தியதால் **"எம் அண்ணாவோ"** என்று மிக்க வாஞ்சையுடன் அழைத்தாள். இதனாலன்றோ **"பெரும்பூதூர் மாமுநிக்குப் பின்னானாள் வாழியே"** என்ற ஆண்டாளின் வாழித் திருநாமத்தை இன்றளவும் நாம் அநுஸந்தித்து வருகின்றோம். இக்காரணம் கொண்டே திருவரங்கத்தமுதனாரும் தனது இராமாநுச நூற்றந்தாதியில்,

**தாழ்வொன்றில்லா மறை தாழ்ந்து, தலமுழுதும் கலியே**
**ஆள்கின்ற நாள் வந்து அளித்தவன் காண்மின், அரங்கர் மௌலி**
**சூழ்கின்ற மாலையைச் சூடிக் கொடுத்தவள் தொல்லருளால்**
**வாழ்கின்ற வள்ளல், இராமாநுசனென்னும் மாமுநியே**

என்றருளிச் செய்கின்றார்.

மேலும் ஸ்ரீ பாஷ்யகாரர், ஸ்ரீ ஆண்டாளின் **"உந்து மதகளிற்றன்"** என்ற திருப்பாவை 18–வது பாசுரத்தை அநுஸந்தித்துக் கொண்டே தன் ஆசார்யரான ஸ்ரீ பெரிய நம்பிகளின் திருமாளிகை கதவைத் தட்ட, தன் கைகளில் குலுங்கும் வளையோசையுடன் ஆசார்ய புத்ரி அத்துழாய் வந்து கதவைத் திறக்க, அவளை

ஆண்டாளாகவே நினைத்து உடையவரும் திருவடி தொழ, அவளும் சடக்கென ஓடித் தன் தந்தையிடம் விண்ணப்பம் செய்ய, அவரும் வாசலில் வந்து, **"உந்து மதகளிற்றன்"** பாசுரம் அநுஸந்தானமோவென்று கேட்டாயிற்றாம். இக்காரணம் கொண்டே அனைவரும் ஸ்ரீராமாநுஜரை, **"திருப்பவை ஜீயர்"** என்றழைக்கலாயினர்.

ஸ்ரீ பாஷ்யகாரர் கீதா பாஷ்யத்தை காலக்ஷேபம் ஸாதித்தபொழுது,

**பஹூநாம் ஜந்மநாம் அந்தே ஜ்ஞாநவாந் மாம் ப்ரபத்யதே|**
**வாஸுதேவ: ஸர்வம் இதி ஸ மஹாத்மா ஸுதுர்லப:||**

என்ற பகவத் கீதை 7–19 ஶ்லோகத்தில் வருகின்ற **"வாஸுதேவஸ்ஸர்வம்"** என்ற சொற்றொடருக்கு பொருளுரைக்கும்போது **"எல்லாம் வாஸுதேவன்"** என்று ஸாதித்து, **"எவை எல்லாம்?"** என்ற வினாவிற்கு,**"உலகமெல்லாம் வாஸுதேவன்"** என்று அர்த்தம் செய்துகொண்டால், **"உலகில் நிற்கின்றதெல்லாம் நெடுமால்"** என்று கொண்டவன் ஞாநியாகிறான். ஞாநியாகிய அப்படிப்பட்ட மஹாத்மா ஸுதுர்லபன் (கிடைத்தற்கரியவன்) என்று மற்ற வ்யாக்யாந கர்த்தாக்களைப் போல் பொருள் கொண்டால், இது ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மாவின் திருவுள்ளத்தின் உண்மைப் பொருளை நமக்கு நன்கு விளக்குவதாகவாகாது.

அதனால், உலகனைத்தையும் வாஸுதேவனாகக் காணும் ஞாநியை இந்த ஶ்லோகத்திற்கு அர்த்தமாகக் கொள்வதைக் காட்டிலும், தனக்கு ஸர்வமும் வாஸுதேவனே என்றிருக்கும் ஞாநியையே, அதாவது தனக்கு தாரக, போஷக, போக்யம் அனைத்தும் வாஸுதேவனே என்றிருக்கும் ஞாநியையே இந்த ஶ்லோகத்திற்கு வேதோக்தமான அர்த்தமாகக் கொள்ளவேண்டுமென்றும் என்று ஸாதித்து, தான் அப்படிக் கூறியதிற்கு ஆதாரமாக,

**"உண்ணும் சோறு பருகு நீர் தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன்"**

என்ற நம்மாழ்வாரின் திருவாய்மொழி (6–7–1) பாசுரத்தை மேற்கோளாகக் காட்டி அருளிச் செய்தது மிகவும் அநுபவிக்கத் தக்கது.

நம் ஸ்வாமி தேஶிகனும் ஸ்ரீமத் ரஹஸ்யத்ரஸாரத்தின் ஆரம்பத்திலேயே,

**செய்த தமிழ் மாலைகள் நாம் தெளிய ஓதித்**
**தெளியாத மறைநிலங்கள் தெளிகின்றோமே**

என்று நம் தர்ஶந ஸ்தாபகரான ஸ்ரீ பாஷ்யகாரரின் திருவுள்ளக் கருத்தையே பிரதிபலிக்கும் முகமாக ஸாதித்திருப்பது மிகவும் ரசிக்கத்தக்கது.

இவ்விதம் ஸ்ரீ பாஷ்யகாரர், ஆழ்வார்களின் பாசுரங்களில் ஆழங்காற்பட்டு அநுபவித்ததை சொல்லிக்கொண்டே போகலாம். கால விளம்பத்தையும், இதைப் படிப்பவர்களின் நேரமின்மையையும் கருத்தில் கொண்டு இந்த வ்யாஸத்தை இத்துடன் தலைக்கட்டிக் கொள்கின்றேன்.

* * * * * * * * * * *